மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்

நிலையறிபரீட்சை – 2021

செய்முறைத் தொழிநுட்பத் திறன்கள் –I,II

பெயர் ∴ சுட்டெண் :-	தரம் :- 8	நேரம் :- 2 மணித்தியாலம்

பகுதி 1

01. ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வகையில் கழிப்பதற்கும் உடல், உள, சமூக ஆரோக்கியத்தைப் பேணுவதுமான செயற்பாடாக அமைவது
    1. நூல்கள் வாசித்தல் 2. விளையாட்டுச் செயற்பாடுகளில் ஈடுபடுதல்
    3. சதுரங்கம் விளையாடுதல் 4. வீட்டுத் தோட்டம் அமைத்தல்
02. போகப் பயிர்க் கூட்டங்களில் அடங்குவது
    1. ஈரப்பலா, தென்னை 2. வாழை, கமுகு
    3. மஞ்சள், கறிமிளகாய் 4. மா, தோடை
03. ஏகார் உற்பத்திக்குப் பயன்படும் நீர்த்தாவரம்
    1. கிண்ணை 2. பச்சை அல்கா 3. சிவப்பு அல்கா 4. காளான்
04. பயிர்களில் பாதிப்பை ஏற்படுத்தும் பூச்சிப்பீடைகளைக் கட்டுப்படுத்த நடுகை செய்யக் கூடிய வெறுப்பூட்டும் பயிராக அமைவது
    1. சூரியகாந்தி 2. நிலக்கடலை 3. தாமரை 4. மல்லிகை
05. விவசாய நடவடிக்கைகளில் மண்ணரிப்பு பெரும் தீங்கான செயற்பாடாகும். மண்ணரிப்பைத் தடுப்பதற்காக உயிர்த்தடையாக உதவக்கூடியது
    1. பொலித்தீன் விரித்தல் 2. கல்வேலி அமைத்தல்
    3. தென்னை மட்டைகளைப் பரப்பி விடுதல் 4. வல்லாரை, பொன்னாங்காணி பயிரிடல்
06. நொதியச் செயற்பாடு காரணமாக நிறமாற்றம் அடையக்கூடிய உணவு வகை
    1. விளாம்பழம் 2. அப்பிள் 3. உருளைக்கிழங்கு 4. மேற்கூறிய யாவும்
07. பசும்பாலை நொதிக்கச் செய்து பெறப்படும் பால் உற்பத்திப் பொருள்
    1. ரின்பால் 2. ஐஸ்கிறீம் 3. தயிர் 4. பால்மா
08. பட்டர், மாஜரீன், தேங்காயெண்ணெய் என்பன இரசாயனத் தாக்கத்தால் பழுதடைதல் எவ்வாறு அழைக்கப்படும்.
    1. பிசுபிசுப்பாதல் 2. உறைதல் 3. பாண்டலடைதல் 4. அழுகுதல்
09. உணவைப் பழுதடையச் செய்யும் பேரங்கிக்கு உதாரணம்
    1. பற்றீரியா 2. பங்கசு 3. வைரசு 4. நீள்மூஞ்சி வண்டு
10. காய்கள் பச்சை நிறத்தில் இருந்து மஞ்சள் நிறமாக மாறும் போது அறுவடை செய்யக்கூடிய பயிர்
    1. பூசணி 2. பாகல் 3. போஞ்சி 4. பப்பாசி

www.lkedu.lk

11. மனித வலுவால் இயங்கக் கூடிய உபகரணத்தொகுதி பின்வருவனவற்றுள் எது?

1. மின்னரைப்பான், மின்சூள்
2. தையல் இயந்திரம் துவிச்சக்கரவண்டி
3. மேசைத் துருவலகு, கீற்றர்
4. குளிர்சாதனப் பெட்டி, முட்டையடிகருவி

12. மின்சமிக்ஞைகளை ஒலிச்சமிக்கைகளாக மாற்றும் உபகரணம்

1. ஒலிபெருக்கி
2. மின்மோட்டர்
3. தொலைக்காட்சிப் பெட்டி
4. விளையாட்டுக்கள்

13. மிதிநெம்பு, பற்சில்லு, மிதி போன்ற பகுதிகளைக் கொண்ட பொறி

1. கார்
2. துவிச்சக்கர வண்டி
3. தையல் இயந்திரம்
4. சிகை உலர்த்தி

14. உராய்வு நீக்கி பயன்படுத்துவதன் அனுகூலம்

1. உராய்வு குறைக்கப்படும்
2. நீண்ட காலம் பாவிக்கலாம்
3. குறைந்த எத்தனத்துடன் தொழிற்படச் செய்யலாம்
4. மேற்கூறிய யாவும் சரி

15. சுற்றுப்பலகையில் துணைக்கூறுகளைப் பற்றாசு பிடித்த பின்னர் மேலதிகமாக உள்ள முனைவுகளை வெட்டி அகற்றப் பயன்படுவது

1. தட்டை முனைக் குறடு
2. வெட்டும் குறடு
3. ருவிசர்
4. அஞ்சலி

16. கடலும் கடல் சார்ந்த பிரதேசங்களிலும் மேற்கொள்ளக்கூடிய வணிக முயற்சிகளில் ஒன்று

1. யோகட் உற்பத்தி
2. ஜாடிக் கருவாடு உற்பத்தி
3. தும்புக்கயிறு தயாரித்தல்
4. பழரசம் தயாரித்தல்

17. கொள்வனவாளர், வழங்குநர் என்போருக்கிடையில் கொடுக்கல் வாங்கல் நடைபெறுமிடம்

1. தொழிற்சாலை
2. வங்கி
3. சந்தை
4. சிற்றுண்டிசாலை

18. வீட்டில் இருந்தவாறே இணையத்தின் மூலம் கொள்வனவு, விற்பனை மேற்கொள்ளப்படும் நடவடிக்கை

1. e – Learning
2. e-Mail
3. e- Low
4. e-Marketing

19. தென்னம் பூந்துணருடன் தொடர்பான உற்பத்தி அல்லாதது

1. கொப்பறா
2. கருப்பிட்டி
3. வினாகிரி
4. தென்னம் பாணி

20. வேறு நபரோ அல்லது வணிகரோ பயன்படுத்தாத மூலப் பொருட்கள் அறிவு, நுட்பம், வலு என்பவற்றைப் பயன்படுத்தி ஆக்கபூர்வமான உற்பத்திகளை மேற்கொள்பவர்

1. தரகர்
2. விஞ்ஞானி
3. புத்தாக்குநர்
4. நுகர்வோர்

(20x2 = 40 புள்ளி)

பகுதி – II

- **முதலாம் வினாவுக்கும் ஏனைய மூன்று வினாக்களுக்கும் விடை எழுதுக. (மொத்தமாக நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக)**

01. 1) வீட்டுத்தோட்டம் ஒன்றை அமைக்கும் போது ஏற்படக்கூடிய பிரச்சினைகள் ஏதாவது இரண்டினைக் குறிப்பிடுக.

2) சிக்கனமாக நீர்ப்பாசன முறைகள் இரண்டு தருக.

3) மட்டுப்படுத்தப்பட்ட இடங்களில் செய்கை பண்ணக்கூடிய பயிர்ச்செய்கை முறைகள் இரண்டு தருக.

www.lkedu.lk

4) நுகர்வுக்குப் பொருத்தமற்ற உணவு எவ்வாறு அழைக்கப்படும்?

5) உணவைப் பழுதடையச் செய்யும் பௌதீகக் காரணிகள் எவையேனும் இரண்டினைக் குறிப்பிடுக.

6) உணவு தயாரிப்பவர் எவ்வாறான முன்னாயத்தங்கள் செய்ய வேண்டும்?

7) உணவை நீண்ட காலம் பேணுவதற்கு செறிவாக்கல் முறை உதவுகிறது. இவ்வாறு செறிவாக்கப் பயன்படும் பொருட்கள் இரண்டு தருக.

8) திரான்சிஸ்ரரில் (Transistor) காணப்படும் 3 முனைகளும் எவை?

9) கொள்ளளவியின் பயன்பாடு யாது?

10) இலங்கைத் தரக் கட்டளை நிறுவனம், சர்வதேச தரநியம நிறுவனத்தின் குறியீடுகளை ஒழுங்கில் தருக. (10x3 = 30 புள்ளி)

02. 1) இலங்கைக்கே உரித்தான பயிர்ப்பேதங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

2) பயிர்ச் செய்கைக் கோபுரம் தயாரிப்பதற்குப் பயன்படும் நடுகை ஊடகக் கலவை யாது?

3) இலங்கையின் உட்பாகத்தில் காணப்படும் நீர்முதல்கள் நான்கினைக் குறிப்பிடுக? (3+ 3+4 = 10 புள்ளிகள்)

03. 1) பழுதடைந்த உணவின் இயல்புகள் மூன்றினைத் தருக.

2) உணவை நீண்ட காலம் பேணக் கூடிய முறைகள் மூன்று தருக.

3) குளிரூட்டல், ஆழ்குளிரூட்டல் வேறுபாடு இரண்டு தருக. (3+3+4 = 10 புள்ளிகள்)

04. 1) மின் உபகரணங்களை வீட்டில் பயன்படுத்தும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் மூன்று தருக.

2) அட்டவணையைப் பூர்த்தி செய்க.

துணைக்கூறின் பெயர்	குறியீடு	தொழிற்பாடு
தடையி		
ஒலிபெருக்கி		
ஆளி		

3) இலத்திரனியல் துணைக் கூறுகளைப் சுற்றுப் பலகையில் வைத்து பற்றாசு பிடிப்பதற்கு உதவும் உபகரணம் எது? (3+3+4 = 10 புள்ளிகள்)

05. 1) விளம்பரத்தின் அடிப்படைக்கூறுகள் மூன்றினையும் தருக.

2) வணிகச் செயற்பாடு காரணமாக சூழல் மாசடையும் சந்தர்ப்பங்கள் மூன்று தருக.

3) விளம்பர ஊடகங்கள் நான்கினைத் தருக (3 +3+4 = 10 புள்ளிகள்)

www.lkedu.lk